Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 11, 2023

திங்கட்கிழமை டிசெம்பர் 11, 2023 | ஒளி: 09 கதிர் 146 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# பெற்றோர்களே! உஷார்



பாடசாலை மாணவர்கள் மற்றும் தனியார் மேலதிக வகுப்பு மாணவர்கள் உட்பட நகருக்கு வரும் இளைஞர், யுவதிகளை இலக்கு வைத்து போதைப்பொருளை விற்பனை செய்த தனியார் மருந்தக ஊழியர் ஒருரை போதைப்பொருள் குளிசைகளுடன் கைது செய்துள்ளதாக அனுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# உடல்களை அடக்கம் செய்வதற்கும் வற்

## 97 பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான பட்டியலை அரசாங்கம் சமர்ப்பிக்கவில்லை

அரச வங்கிகளிடமிருந்து பல கோடி ரூபா கடன் பெற்று, கடனை செலுத்தாத 150 பேருக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில் மனித உடல்களை அடக்கம் செய்வதற்கும் வரி அறவிடுதல் எந்தளவுக்கு நியாயமானது? அதனால்தான் முறைகேடான வகையில் வற் வரியை அமுல்படுத்த அரசாங்கம் எடுக்க முயற்சியை தோற்கடித்துள்ளோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

# அரசாங்கத்துக்கு ‘வற்’ தோல்வி

## ஞாயிறு கூடிய சபையில் ‘கோரம்’ இல்லை: 2 மணிநேரத்தில் நிறைவு

## வற் வரி சட்டமூலத்தை அரசாங்கம் களவாக நிறைவேற்றிக்கொள்ள முயல்கின்றது

பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் என்பவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்காக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றம் ஞாயிற்றுக்கிழமை (10) விசேடமாகக் கூடியது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் நடைபெற்றுக்கொண்டிருப்பதால், பட்ஜெட் மீதான இறுதிக்கட்ட வாக்கெடுப்பு நிறைவடையும் வரையிலும் ஞாயிற்றுக்கிழமை, போயா தினங்களைத் தவிர்த்து, சனிக்கிழமைகளிலும் பாராளுமன்றம் கூட்டப்படுகின்றது.

தொடர்ச்சி P2





# 10 கோடி ரூபாய் தங்கம் சிக்கியது

கற்பிட்டி, பத்தலங்குண்டுவ களப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கோடி ரூபாய் பெறுமதியான நான்கு கிலோ கிராம் தங்கத்துடன் இரண்டு மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இது கண்டுபிடிக்கப்பட்டதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# “மண்வெட்டிக்கும் வற் விதிப்பு”

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு எதிராகவே வற் வரியை அரசாங்கம் அதிகரிக்கின்றது. பொது போக்குவரத்து சேவை,கல்வி,சுகாதாரம் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது வரி விதிக்க வேண்டாம் என நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது என குறிப்பிட்ட, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான ஹர்ஷ டி சில்வா, திரிபோஷா, முட்டை உட்பட உணவுப் பொருட்களுக்கு வரி விதிக்குமாறு நாணய நிதியம் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை என்றார். பாராளுமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்ற சேர் பெறுமதி வரி (வற்) திருத்தச் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றும்



தொடர்ச்சி P2

# இந்திய மீனவர்கள் 220 பேர் கைது

## இரண்டு மீன்பிடி படகுகளுடன் கைது செய்யப்பட்ட 25 மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை


இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 33 இந்திய மீன்பிடி படகுகளுடன் 220 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

நாட்டின் கடற்பரப்பை அத்துமீறிச் செல்லும் வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஒடுக்கவும்,

தொடர்ச்சி P2



# ‘அறியப்படாத’ உறுதி மொழிகளின் எண்ணிக்கை 15 ஆகக் குறைந்துள்ளது




2024 வரவு- செலவுத் திட்டத்துடன் பல துணை ஆவணங்கள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையின் தற்போதைய சர்வதேச நாணய நிதிய (IMF) திட்டத்தின் வெளிப்படைத்தன்மை நவம்பர் மாத்தில் மேம்பட்டுள்ளது என்று வெரிட்டே ரிசர்ச்சின் ‘IMF கண்காணிப்பான்’ இன் சமீபத்திய புதுப்பிப்பு தெரிவிக்கிறது.

முன்பு ‘அறியப்படாதவை’ என வகைப்படுத்தப்பட்ட ஆறு உறுதிமொழிகளின் செயல்திறன் குறித்த தகவல்களை தொடர்புடைய துணை ஆவணங்கள் வழங்கியுள்ளன. அதில் ஐந்து உறுதிமொழிகள் தற்போது ‘நிறைவேற்றப்பட்டது’ என்றும் ஒன்று வரி வருவாய் இலக்கு ‘நிறைவேற்றப்படவில்லை’ என்றும் மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.

நவம்பர் இறுதிக்குள் எதிர்பார்க்கப்பட்ட 73 உறுதிமொழிகளில், 12 ‘நிறைவேற்றப்படவில்லை’, 15

தொடர்ச்சி P2

# அஸ்வெதுமயில் மண் சரிவு; 25 குடும்பங்கள் வெளியேற்றம்



ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கலிபானவல அஸ்வெதும மலையில் ஏற்பட்டுள்ள பாரிய மண்சரிவால் கலிபானவல கிராமத்திலிருந்த 25 குடும்பங்களைச் சேர்ந்த 97 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். மண்சரிவுக்கான அடிப்படை அறிகுறிகள் தென்பட்டதையடுத்து மக்களை உடனடியாக அவர்களது குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்பட்டதாகவும் அந்த வீடுகளிலிருந்த உடமைகளும் காலையில் அகற்றப்பட்டதாகவும் ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் பிரியங்கிகா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# “சம்பள முன்மொழிவு தற்காலிக தீர்வு”

## ஜீவன் விசனம்: நிரந்தர தீர்வே அவசியம் என்கிறார்




பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாட் சம்பள முறைமை மாற்றப்பட வேண்டும். அவர்களுக்கு நியாயமான வருமானம் இலாபம் கிடைக்கக்கூடிய வகையில் புதிய பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம் என்று இலங்கை தொழிலாளர்

தொடர்ச்சி P2

# ஹட்டனில் காவலாளியை கொன்றுவிட்டு: உண்டியல் திருட்டு

■ ரஞ்சித் ராஜபக்ஷ



ஹட்டன் ஜும்மா பள்ளிவாசலில் பணிபுரிந்த காவலாளியை தலையில் அடித்துக் கொலை செய்துவிட்டு அங்கிருந்த உண்டியல் பணத்தை திருடிச் சென்றுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஹட்டன் ஜும்மா பள்ளிவாசலில் சுமார் இரண்டு வருடங்களாக காவலாளியாக கடமையாற்றிய ஹட்டன் ஹிஜிரபுர பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான எம்.இப்றாஹிம் (வயது 67) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஒருவர் ஜும்மா பள்ளிவாசலின் சுவரில் இருந்து சனிக்கிழமை (09) குதித்து காவலாளி தங்கியிருக்கும் அறைக்கு

தொடர்ச்சி P2



# மின் துண்டிப்பு குறித்து விசாரணை

நாடு முழுவதும் சனிக்கிழமை (09) மாலை முதல் ஏற்பட்ட மின் துண்டிப்பு தொடர்பாக மின்சார சபை மற்றும் எரிசக்தி, மின்சக்தி அமைச்சு மட்டத்தில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘வற்’ தோல்வி

எனினும், வற் வரி திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக, பாராளுமன்றம் ஞாயிற்றுக்கிழமை (10) விசேட அமர்வாக , சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், முற்பகல் 9.30 மணிக்கு கூடியது. பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர், விவாதம் ஆரம்பமானது. பி.ப. 4.30 மணி வரை விவாதம் இடம்பெறவிருந்தது. அதன்பின்னர் வாக்கெடுப்புக்கு விட தீர்மானிக்கப்பட்டிருந்தது.

வற் வரி திருத்த சட்டமூலம் மீது ஆரம்பத்திலிருந்தே கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வற் வரி விதிக்கப்படுவதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டினர்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக செப்டம்பர் மாத முதல் பகுதியில், எதிர்பார்க்கப்பட்ட திட்டத்தின் இரண்டாவது தவணையான சுமார் 330 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவது குறித்து சர்வதேச நாணய நிதிய சபை டிசம்பர்- 12 வாக்கெடுப்பு நடத்தவுள்ளது.

இந்நிலையில், பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டமூலத்தில் வற் வரி அறவிடப்படாத பொருட்களின் விபரங்களை எதிர்க்கட்சியினர் கேட்டுக்கொண்டிருந்தனர். எனினும், வற் அறவிடப்படும் பொருட்களைத் தவிர ஏனைய பொருட்கள் வற் வரி அறவிடப்படாதென நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மற்றும் சேன் சேமசிங்க ஆகியோர் பதிலளித்தார்.

இதுதொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட, பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, அனுரகுமார திஸாநாயக்க, விமல் வீரவன்ச ஆகியோர் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

எனினும், திடீரென எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான நளீன் பண்டார, இந்த சபையில் கோரமில்லை (கூட்ட நடப்பெண்), வற் வரி சட்டமூலத்தை அரசாங்கம் களவாக நிறைவேற்றிக்கொள்ள முயல்கின்றது என்றார்.

இதனிடையே எழுந்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, தற்போது நேரம் என்ன? வாக்கெடுப்பு மாலையில்தான் நடைபெறவிருக்கின்றது என்றார்.

எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் கூட்ட நடப்பெண் தொடர்பில் தலைமை தாங்கும் உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதற்கமைய, வாக்களைப்பு மணி 5 நிமிடங்கள் ஒலிக்கப்பட்டதை அடுத்து கூட்ட நடப்பெண் இன்மையால் நிலையியற் கட்டளைகளுக்கமைய பாராளுமன்ற திங்கட்கிழமை (11) மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக தலைமை வகித்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ அறிவித்தார்.

அரசியலமைப்பின் 73ஆம் உறுப்புரையின்படி பாராளுமன்றத்தின் கூட்ட நடப்பெண் தலைமை தாங்கும் உறுப்பினர் உட்பட இருபது உறுப்பினர்களாகும். அத்துடன், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 11 இன் பிரகாரம் எந்நேரத்திலாவது கூட்ட நடப்பெண் இல்லை என்பது சபாநாயகரினதோ அல்லது தலைமை தாங்கும் உறுப்பினரதோ கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அவர் வாக்கழைப்பு மணி அடிக்கக் கட்டளையிடுவார். வாக்கழைப்பு மணி ஐந்து நிமிடங்களின் முடிவில் கூட்ட நடப்பெண் காணப்படாதபோது சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல் வேண்டும்.

# பெற்றோர்களே! உஷார்

கைது செய்யப்பட்டவர், அனுராதபுரம் திஹியாகம சந்திக்கு அருகில் அமைந்துள்ள தனியார் மருந்தகம் ஒன்றில் பணிபுரிந்து வந்த 22 வயதுடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரை கைது செய்த போது, அவரிடம் இருந்து 685 குளிசைகள் கைப்பற்றப்பட்டதாகவும் அவை மருத்துவரின் பரிந்துரையின் பேரில் மட்டுமே நோயாளிகளுக்கு வழங்கப்படுவதாகவும், அளவுக்கு அதிகமாக உட்கொள்ளும் போது போதையை ஏற்படுத்துவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# 10 கோடி ரூபாய் தங்கம் சிக்கியது

கல்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 27 முதல் 35 வயதுக்குட்பட்ட தங்கக் குளத்தில் மறைந்திருந்ததாக நம்பப்படும் சந்தேக நபர்கள் மற்றும் டிங்கி படகு ஆகிய இருவரையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த நாட்டிலிருந்து இந்தியாவுக்கு எடுத்துச் செல்வதற்காக நான்கு கிலோ கிராம் தங்கம் பத்தலங்குண்டு குளத்தில் ஒரு பொதியில் பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் நிலையில், வடமேற்கு கடற்படைக் கட்டளையின் விஜயா முகாம் அதிகாரிகள் களப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலுக்குப் பின்னர் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர்கள் 220 பேர் கைது

உள்ளூர் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் கடற்படை வழக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீன்பிடி படகுகளை விரட்டியடிப்பதற்காக இலங்கை கடற்படையினர் காங்கேசன்துறை கடற்பரப்பில் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட, இந்திய மீனவர்கள் 25 பேர் கைது செய்யப்பட்டனர். இரண்டு இந்திய மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டன.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் சனிக்கிழமை (9) இரவோடு இரவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இரண்டு இந்திய மீன்பிடி படகுகளும் 25 மீனவர்களும் காங்கேசந்துறை துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகக் கடற்படை மேலும் குறிப்பிட்டுள்ளது.

# உடல்களை அடக்கம் செய்வதற்கும் வற்

பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் கூறுகையில்,

வற் வரியில் புதிதாக இணைக்கப்படும் 97 பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான பட்டியலைச் சபைக்கு சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தினோம். வற் வரி சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு அதிக அக்கறை கொண்ட அரசாங்கம் வரி தொடர்பான தகவல்களை சபைக்கு சமர்ப்பிக்கவில்லை. 97 பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான பட்டியலையும் சமர்ப்பிக்கவில்லை.

அத்துடன் அரச வங்கிகளிடமிருந்து பல கோடி ரூபாய் கடன் பெற்ற 150 பேரின் பெயர் விபரங்களைப் பகிரங்கப்படுத்துமாறு நிதியமைச்சரிடம் பலமுறை கோரிக்கை விடுத்தேன். ஆனால், இதுவரை அது தொடர்பான விபரங்கள் கிடைக்கவில்லை. இவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை அடக்கம் செய்வதற்கும் வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது எந்தளவுக்கு நியாயமானது. அதனால்தான் பிரதான எதிர்க்கட்சி உட்பட ஏனைய எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டை தோற்கடித்துள்ளோம்

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளி, பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ மஹிந்த ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ, அஜித் நிவார்ட் கப்ரால், லக்ஷ்மன். ஆட்டிகல, பி.பி.ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவர்கள் சுகபோகமாக வாழ்கிறார்கள்.

பொருளாதார படுகொலையாளிகள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளவர்களின் குடியுரிமையைப் பறித்து, அவர்கள் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட வேண்டும். இதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்றார்.

# “மண்வெட்டிக்கும் வற் விதிப்பு”

போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, தூரநோக்கற்ற வகையில் எடுத்த தவறான தீர்மானத்தினால் 60,000 கோடி ரூபாய் முதல் 70,000 கோடி ரூபாய் வரையான வரி வருமானம் இழக்கப்பட்டது. இதனை தொடர்ந்து நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது.

பொருளாதார பாதிப்புக்கு யார் காரணம் என்ற கேள்விக்கு ராஜபக்ஷக்கள் ,மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், லக்ஷ்மன், திறைசேரியின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் என உயர்நீதிமன்றம் உறுதியான பதிலளித்துள்ளது. பெறுமதி சேர் வரி (வற்) தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் நேரடியாக எதனையும் குறிப்பிடவில்லை. அடுத்த ஆண்டு முதல் 15 சதவீதமாக உள்ள வற் வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்படும்.தற்போது பூச்சியமாக உள்ள வரி வீதங்கள் கூட அடுத்த ஆண்டு முதல் 18 சதவீதமாக அதிகரிக்கப்படும்

வற் வரி தொடர்பில் அரசாங்க நிதி தொடர்பான குழுவில் கலந்துரையாடப்பட்டது. ஆனால், குழு பரிந்துரைத்த விடயங்களை அரசாங்கம் செயற்படுத்தத் தயாரில்லை.அடுத்த ஆண்டு முதல் திரிபோஷா, முட்டை, உட்பட சகல உணவுப் பொருட்கள் மீதும் வற் வரி விதிக்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு எதிராகவே வற் வரி அதிகரிக்கப்படுகின்றது. பொது போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது வரி விதிக்க வேண்டாம் என நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. திரிபோஷா,முட்டை ஆகியவற்றுக்கு வரி விதிக்குமாறு நாணய நிதியம் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. தற்போது வற் வரிக்குள் மண்வெட்டி கூட உள்ளடக்கப்பட்டுள்ளது என்றார்.

# ‘அறியப்படாத’ உறுதி மொழிகளின் எண்ணிக்கை 15 ஆகக் குறைந்துள்ளது

‘அறியப்படாதவை’ என்றும், மேலும் 46 ‘நிறைவேற்றப்பட்டவை’ என வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, நவம்பர் இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய உறுதிமொழிகளில் 63% நிறைவேற்றப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இலங்கையின் ஒட்டுமொத்த செயல்திறன் ஈர்க்கக்கூடியதை விட குறைவாகவே உள்ளது.

நாளை இரண்டாம் தவணைக்கான வாக்குப்பதிவு இடம்பெறவுள்ளது செப்டம்பர் மாத முதல் பகுதியில், எதிர்பார்க்கப்பட்ட திட்டத்தின் இரண்டாவது தவணையான சுமார் 330 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவது குறித்து சர்வதேச நாணய நிதிய சபை நாளை (டிசம்பர் 12) வாக்கெடுப்பு நடத்தவுள்ளது.

இரண்டாம் தவணை கட்டணத்தை வழங்க சர்வதேச நாணய நிதிய சபையின் ஒப்புதலுக்கான கோரிக்கையிலிருந்து வெளிவரக்கூடிய திருத்தப்பட்ட உறுதிமொழிகள் மற்றும் காலக்கெடு தொடர்பான விபரங்களுடன் இக்கருவி புதுப்பிக்கப்படும்.

# அஸ்வெதுமயில் மண் சரிவு; 25 குடும்பங்கள் வெளியேற்றம்

இந்த மண்சரிவினால் சுமார் முப்பது ஏக்கர் நிலப்பரப்பு பாதிக்கப்பட்டுள்ளதுடன், நெற்பயிரும் மண்சரிவில் மூழ்கியுள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை 6 வீடுகள் மூழ்கியுள்ளதாகவும் இடிபாடுகள் மேலும் கீழுமாக நகர்ந்து ஏனைய வீடுகள் மூழ்கியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் குறித்த பகுதியை அதிக ஆபத்துள்ள பகுதியாக நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின் துண்டிப்பு குறித்து விசாரணை

நாடு முழுவதும் சனிக்கிழமை மாலை முதல் ஏற்பட்ட மின் துண்டிப்பு தொடர்பாக பாராளுமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கூற்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றை முன்வைக்கையில்

ஒரு மின் விநியோக கட்டமைப்பு செயலிழந்ததால் சனிக்கிழமை நாடு முழுவதும் இருளடைந்திருந்தது. இது நாட்டின் பொருளாதாரத்திற்கும் அன்றாட மக்கள் வாழ்க்கைக்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் பெரும் சிக்கலானது .

பொருளாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டமை போன்றே குடிநீர் விநியோகத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டது. வைத்தியசாலைகளில் நோயாளிகளும் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகினர். கைத்தொழில் துறையிலும் பாதிப்பு ஏற்பட்டது. மொத்தத்தில் பாதுகாப்பற்ற நிலை காணப்பட்டது.

ஒரு மின் விநியோக கட்டமைப்பு மாத்திரம் செயலிழந்திருந்தால் எவ்வாறு முழு நாட்டிற்கும் மின்சாரம் இல்லாது போயிருக்கும்?எனவே அது தொடர்பில் சுயாதீனமானதும் நேர்மையானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். எவர் மீதாவது குற்றஞ் சாட்டுவது எமது நோக்கமல்ல. எனினும் இந்த பாதிப்புக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த,

அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அமைச்சு மட்டத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன அதே போன்று ஒரு மின் விநியோக கட்டமைப்பு மாத்திரம் செயலிழந்திருந்தால் எவ்வாறு முழு நாட்டிற்கும் மின்சாரம் இல்லாது போயிருக்கும் என எதிர்க் கட்சித் தலைவர் கேள்வியெழுப்பியுள்ளார். இது தொழில்நுட்ப ரீதியாக ஆராய வேண்டிய விடயம்

இதுவரை நாம் மின் உற்பத்தியை நுரைச்சோலை அனல் மின் நிலையம் மூலம் முன்னெடுக்கின்றோம் அதன் மூலம் 300 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஏனைய அனைத்து மின்சாரத்தையும் நாம் நீர் மின் உற்பத்தி மூலமே பெற்று வருகின்றோம். அந்த வகையில் சீரற்ற காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தி விநியோக கட்டமைப்பிலேயே இந்த செயலிழப்பு இடம்பெற்றுள்ளது.

அந்த சந்தர்ப்பத்தில் 1500 மெகாவோட் மின்சாரத்திற்கான கேள்வி இருந்தது. எனினும் 300 மெகாவோட் மின்சாரமே இருந்தது. அச்சமயம் நுரைச்சோலை மின் விநியோக கட்டமைப்பும் செயலிழந்தது. அந்த வகையில் அனைத்து விநியோக கட்டமைப்புகளும் செயலிழந்தன.இவற்றை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு சுமார் 4 மணித்தியாலங்கள் தேவைப்பட்டது. சிறு மின் உற்பத்தி நிலையங்கள் மூலமே நிலைமையைச் சரி செய்ய முடிந்தது.இந்நிலைமை மின்சார சபையும் எரிசக்தி மின் சக்தி அமைச்சும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இந்த வருடத்தில் அனைத்து நாட்களும் எந்த தடையுமின்றி நாம் மின்சாரம் வழங்கினோம். எதிர்பாராத விதமாகவே இந்த செயலிழப்பு ஏற்பட்டது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.அந்த வகையில் மிகவும் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் அதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

# “சம்பள முன்மொழிவு தற்காலிக தீர்வு”

காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் வெள்ளிக்கிழமை (08) மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

“ பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் நாம் உட்பட கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஜனாதிபதி தெரியப்படுத்தியுள்ளார். அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் சம்பள உயர்வு அவசியம் எனவும் ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த முயற்சியை, யோசனையை நாம் வரவேற்கின்றோம். கூட்டு ஒப்பந்த முறைமை ஊடாக குறைந்தபட்ச நாட் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாய் வழங்குமாறும், அவ்வாறு இல்லையேல் மாற்று முன்மொழிவை டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் முன்வைக்குமாறும் ஜனாதிபதி பணிப்பு விடுத்துள்ளார்.

1,700 ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என இலக்கங்களை மையப்படுத்திக்கொண்டிருக்காமல், நாட் சம்பள முறைமையிலிருந்து மாற வேண்டும். இந்த விடயத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். தற்போதைய சம்பள முன்மொழிவு என்பது தற்காலிக தீர்வாகவே அமையும். எமக்கு நிரந்தர தீர்வு அவசியம். எமது மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வருமானம் கிடைக்கும் வகையிலான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

# ஹட்டனில் காவலாளியை கொன்றுவிட்டு: உண்டியல் திருட்டு

சென்று விட்டு வெளியே வந்து பள்ளிவாசலில் இருந்த உண்டியலை உடைத்து பணத்தை எடுத்துச் சென்றுள்ளதாக பள்ளிவாசல் போதகர் ஏ.ஜே.எம்.ஃபாமிஸ் கூறியுள்ளார். ஹட்டன் ஜும்மா பள்ளிவாசலின் உண்டியல் பல தடவைகள் உடைக்கப்பட்டு, பணம் எடுத்துச் செல்லப்பட்டது. அதன் பின்னர் பள்ளிவாசல் பாதுகாப்புக்காக காவலாளி நியமிக்கப்பட்டதாக பள்ளிவாசல் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

மிஹிந்தலை புனித பூமிக்கு பணிக்கு செல்ல

# “இராணுவத்தினரும் விரும்பவில்லை”

## இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தெரிவிப்பு; 251 பாதுகாப்பு அதிகாரிகளை மீளப் பெற தீர்மானம் என்கிறார்

இராணுவத்தின் மீது படுகொலை முயற்சி குற்றச்சாட்டை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தனது உயிருக்கு இராணுவத்தினராலும், பாதுகாப்பு தரப்பினராலும் அச்சுறுத்தல் என்று மிஹிந்தலை விகாராதிபதி கருதினால் இராணுவத்தினர் உட்பட 251 பாதுகாப்பு அதிகாரிகளை மீளப் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மிஹிந்தலை புனித பூமிக்கு பணிக்குச் செல்ல இராணுவத்தினரும் விரும்பவில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) விசேட கூற்றை முன்வைத்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், மிஹிந்தலை விகாரைக்கும், அதன் விகாராதிபதிக்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்விகளை முன்வைத்துள்ளார். மிஹிந்தலை புனித பூமியில் 103 கடற்படை அதிகாரிகளும், 48 இராணுவத்தினரும், 100 சிவில் பாதுகாப்பு வீரர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், ஏனைய செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபடுகிறார்கள். விகாராதிபதியின் கோரிக்கைக்கு அமைய பல்வேறு செயற்பாடுகளுக்காக பாதுகாப்பு தரப்பினரை மிஹிந்தலை விகாரைக்கு வழங்கியுள்ளோம். இவ்வாறான நிலையில், இரண்டு பேர் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் கருத்துக்களை முன்வைத்தார். கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதிக்கு பின்னர் மதத் தலங்கள், சுற்றுலா மையங்கள் உட்பட பொது இடங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சிவில் உடையுடன் இராணுவத்தினர் விகாரைக்கு செல்ல முடியாது என்பதை சனிக்கிழமையே அறிந்து கொண்டேன். பாதுகாப்புக்காகவே இராணுவத்தினர் சிவிலுடையில் புனித பூமியில் இருந்துள்ளார்கள்.

இராணுவத்தினரால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் என்று மஹிந்தலை விகாரையின் விகாராதிபதி கருதினால் அங்கு பாதுகாப்பு உட்பட ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடும் 252 பாதுகாப்பு தரப்பினரையும் மீளப்பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளோம் என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் தவறான தீர்மானம் தொடர்பில் கடும் அதிருப்தி தெரிவிக்கின்றோம். மிஹிந்தலை புனித பூமியைப் பாதுகாக்க இராணுவத்தினர் உட்பட முப்படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள்.

பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரியாமல் இனந்தெரியாத இருவரை புனித பூமியில் வைத்து பொலிஸார் பிடித்துள்ளார்கள். இவ்வாறான நிலையில் அங்கு பாதுகாப்பில் உள்ள 251 பேரை மீளப் பெறுவதாகக் குறிப்பிடுவது அநீதி. பௌத்த மதத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே தவறான தீர்மானங்களை எடுக்க வேண்டாம் என்றார்.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், இந்த இரண்டு பேர் 48 இராணுவத்தினருடன் இரண்டு வாரங்களாக மிஹிந்தலை புனித பூமியில் இருந்துள்ளார்கள். ஆகவே பாதுகாப்பு தரப்பினர்களுக்குத் தெரியாத நபர்கள் என்று குறிப்பிடுவது தவறு. இராணுவத்தினருக்கும் சுய கௌரவம் உள்ளது. அவர்களின் சுய கௌரவம் தொடர்பில் நாங்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும். மிஹிந்தலை புனித பூமியில் சேவையில் உள்ள இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதுடன, அந்த பகுதியைத் தூய்மைப்படுத்தும் பணிகளிலும் ஈடுபடுகிறார்கள். இராணுவத்தினர் படுகொலை செய்ய வந்தார்கள் என்று குற்றம் சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கத்துடன் உள்ள பிரச்சினைகளை அரசாங்கத்துடன் தீர்த்துக் கொள்ள வேண்டும். இராணுவத்தினரை அரசியலுக்கு பயன்படுத்த கூடாது. இவ்வாறான குற்றச்சாட்டுக்களினால் மிஹிந்தலை புனித பூமிக்கு பணிக்கு செல்ல பாதுகாப்பு தரப்பினர் விரும்பவில்லை. ஆகவே 251 பாதுகாப்பு தரப்பினரை மீளப்பெற்றுக் கொள்ளும் எமது தீர்மானத்தில் மாற்றமில்லை என தெரிவித்துள்ளார்.



## புலிகளின் சின்னத்தை ஒட்டிய சாரதி கைது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பின் சின்னம் அடங்கிய ஸ்டிக்கரை முச்சக்கரவண்டியில் ஒட்டியிருந்த சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை கந்தேநுவர பிரதேசத்தில் வைத்தே இவர், ஞாயிற்றுக்கிழமை (10) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர், ஜா- எல பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பணியாற்றியவர் எனவும் விடுமுறைக்காக மாத்தளையில் உள்ள தனது வீட்டுக்கு சென்றிருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த கந்தேநுவர பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## நாயைக் காப்பாற்ற முயன்ற பெண் பலி

தான் ஆசையோடு வளர்த்த நாய் ரயிலில் மோதுண்டு இறந்துவிடுமென அச்சமடைந்த பெண்ணொருவர், தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்த நாயை காப்பாற்ற முயற்சித்த வேளையில், ரயிலில் மோதுண்டு மரணித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்த கொழும்பு கோட்டையை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கடுகதி ரயிலில் மோதுண்டு குருநாகல் வெல்ல பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

சனிக்கிழமை (08) இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கரையோர சுவீகரிப்பிற்கு எதிராக போராட்டம்





**நிதர்ஷன் வினோத்**

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும் பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சியைக் கைவிட வலியுறுத்தி போராட்டமொன்று பொன்னாலை சந்தியில் ஞாயிற்றுக்கிழமை (10) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் பொன்னாலை தொடக்கம் அராலி வரையுள்ள கடற்றொழிலாளர்கள், அரசியல் கட்சிகளின் சார்பில் சட்டத்தரணி க.சுகாஸ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்துள்ளனர்.

## 11 வயது சிறுமி பலாத்காரம்: மாற்றாந்தன் கைது

**சுமணசிறி குணதிலக்க**

மொனராகலை - குடோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நல்கல்லார தெள்ளுல்ல குடியிருப்பில் வசிக்கும் 11 வயதுடைய சிறுமி, தனது தாயின் இரண்டாவது கணவரினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி தனது தாய், தங்கை, சகோதரன் மற்றும் தாயின் இரண்டாவது கணவர் ஆகியோருடன் வசித்து வந்த நிலையில், தாய் மற்றும் சகோதரர்கள் வீட்டின் வெளியறையில், உறங்கிக்கொண்டிருந்த போது தாயின் இரண்டாவது கணவரால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் சிறுமி தனது தாயிடம் கூறாமல் வகுப்பு ஆசிரியரிடம் தெரிவித்துள்ளதையடுத்து, ஆசிரியர் பொலிஸாரிடம் புகார் செய்துள்ளதுடன் குடோயா பொலிஸாரால் சந்தேக நபரை வெள்ளிக்கிழமை (08) கைது செய்துள்ளனர்.

## இரண்டு மீனவர்கள் 3 நாட்களாக மாயம்

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு-கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள கல்மடு கடல் பிரதேசத்தில்பைவர் இயந்திர படகில் மீன்பிடிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை (8) கடலுக்கு சென்ற இருவர், 3 தினங்களாகியும் வீடு திரும்பாது இயந்திர படகுடன் காணாமல் போயுள்ளதாகவும் இவர்களை கடற்படையினர் தேடிவருவதாக கல்குடா பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை (10) தெரிவித்துள்ளனர். கல்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய தங்கவேல் தங்கத்துரை, 56 வயதுடைய கந்தையா புண்ணியராசா ஆகிய இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை (08) மாலை 5 மணிக்கு கல்குமடு கடற்கரையில் இருந்து பைவர் இயந்திரப் படகில் கடலில் மீன்பிடிப்பதற்காக சென்றவர்கள் வீடு திரும்பாத நிலையில், அவர்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வாழ்நாள் சாதனையாளர்கள்

இலங்கை பத்திரிகையாளர் சங்கத்துடன் இணைந்து, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் 24ஆவது தடவையாக நடத்தும் இதழியல் சிறப்பு விருது விழா, கல்கிசை-மவுண்லேனியா ஹோட்டலில், டிசெம்பர் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில், கௌரவிக்கப்படவிருக்கும் வாழ்நாள் சாதனையாளர்கள் ஐவரின் விபரம்...


### எச்.எல்.டி.மஹிந்தபால



எச்.எல்.டி.மஹிந்தபால அவரது பத்திரிகையியல் துறையிலான பணியை லேக் ஹவுஸில் ஆரம்பித்து டெயிலி நியூஸ் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகப் பதவி நிலை உயர்ந்தார். அதன் பின்னர் சில காலத்திற்கு வெளிநாடு சென்ற அவர், பத்திரிகையில் வெவ்வேறு விடயதானங்களில் கட்டுரைகளை பங்களிப்புச் செய்து வந்தார்.

1990ஆம் ஆண்டில் தாய்நாடு திரும்பிய அவர், லேக் ஹவுஸில் சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் பதவியில் இணைந்தார். 1994ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியில் தொடர்ந்த அவர், அந்த சமயத்தில் இலங்கை உழைக்கும் ஊடகவியல் சங்கத்தின் தலைவராக இரு வருட காலமாக சேவையாற்றினார்.

### சீதா ரஞ்ஜனி



சீதா ரஞ்ஜனி 1979ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ரஜரட்ட சேவையில் தனது தொழிலை ஆரம்பித்தார். மிகவும் ஆரம்ப கட்டத்தில் கையெழுத்து படிவ எழுத்தாளராகக் கடமையாற்றிய அவர், 1986ஆம் ஆண்டில் மாற்று சஞ்சிகையான விவரணவை ஆரம்பித்த குழுவில் அங்கம் வகித்தார்.

அச்சு ஊடகத்துறையிலிருந்து ஒலிபரப்புத் துறைக்கு நகர்ந்த அவர், பின்னர் தரணி, சக்தி, மாத்ய, நிறீஷன, சாமகாலி உள்ளடங்கலாக அநேக சஞ்சிகைகளைத் தொகுப்பதில் ஈடுபட்டார். 1990ஆம் ஆண்டில் மாற்றுப் பத்திரிகையான யுக்தியவின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரானார்.

இது அவரது ஊடகவியல் பணியில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. 45 வருட காலம் பரந்துள்ள அவரது ஊடகப் பணியில் அவர் பெருமளவில் இரிதா லங்காதீப, தினமின, தேசாதிய மற்றும் ராவய உள்ளடங்கலான பல்வேறு பத்திரிகைகளுக்கு சுயாதீன ஊடகவியலாளராக பங்களிப்பு செய்துள்ளார். அத்துடன், அவர் ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர் ஒருவராகவும் முக்கிய வகிபாகம் வகித்துள்ளார்.

அவரது ஊடகவியல் துறைக்கான பங்களிப்பானது 2004ஆம் ஆண்டில் சமூக அபிவிருத்திப் பிரச்சினைகள் தொடர்பான சிறந்த அறிக்கையிடலுக்கான விருதை அவர் வென்ற பொழுதும் 2012ஆம் ஆண்டில் ஊடக சுதந்திரத்திற்கான சேபால குணசேன விருது அவருக்கு வழங்கப்பட்ட போதும் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

### ஸ்டான்லி சமரசிங்க



1940ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி கொழும்பில் பிறந்த ஸ்டான்லி சமரசிங்க, சண் பத்திரிகை மூலம் 1962ஆம் ஆண்டில் ஊடகத்துறையில் பிரவேசித்ததுடன் அவர் சோவியத் ஒன்றியம் மற்றும் ஈராக்கில் பத்திரிகைத்துறையில் பயிற்சி பெற்றிருந்தார்.

தொழில்முறை ஊடகவியலாளரான ஸ்டான்லி சமரசிங்க, தவச, அத்த, திவயின, தினமின டெய்லி நியூஸ், மௌபிம, சிலோன் டுடே ஆகிய பத்திரிகைகளில் 58 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். அத்துடன், அவர் சிரச நிறுவனத்திலும் பணியாற்றியுள்ளார். 35 வருடங்களாக உச்ச நீதிமன்றத்தில் மூத்த நீதிமன்ற நிருபராகவும் கடமையாற்றியுள்ளார்.

நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி இடம்பெற்ற பிரேமாவதி மனம்பேரி படுகொலைச் சம்பவம் தொடர்பில் முதன்முதலில் உலகிற்கு உண்மையை வெளிக்கொணர்ந்தவர் ஸ்டான்லி சமரசிங்க ஆவார். இந்தக் கொலை சம்பவத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த அதன் பத்திரிகை ஆசிரியர் பி.ஏ.சிறிவர்தனவின் உத்தரவின் பிரகாரம் அவசரநிலை மற்றும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலும் கூட அவர் கதிர்காமம் சென்றார்.

இந்தக் கொலையின் அனைத்து தகவல்கள் குறித்தும் நாடு முழுவதும் மட்டுமின்றி பிரித்தானியாவின் எவர்பரி பிரபு உட்பட உலகெங்கிலுமுள்ள மனித உரிமை ஆர்வலர்கள் கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### சின்னத்துரை தில்லைநாதன்



யாழ்ப்பாணம் - வடமராட்சி புலோலியைச் சேர்ந்த சின்னத்துரை தில்லைநாதன், அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக இலங்கையின் முன்னணி தேசிய தமிழ் பத்திரிகையான வீரகேசரியின் பிராந்திய செய்தியாளராகத் தொடர்ச்சியாக பணியாற்றி வந்தார்.

அவர் கண்டியிலிருந்து வெளிவந்த “செய்தி” வார இதழின் யாழ்ப்பாணப் பிராந்திய செய்தியாளராக 1968ஆம் ஆண்டு இணைந்து பத்திரிகைத்துறையில் பிரவேசித்தார். பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான ஈழநாடு பத்திரிகையின் நிருபராக இணைந்து 1985ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

வீரகேசரியின் புலோலி செய்தியாளராக 1972ஆம் ஆண்டில் இணைந்துகொண்ட தில்லைநாதன், பின்னர் வடமராட்சி பிரதேசம் முழுவதற்குமான வீரகேசரியின் செய்தியாளராக நியமிக்கப்பட்டார். 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரை அந்த பத்திரிகையின் யாழ்ப்பாணச் செய்தியாளராக பணியாற்றும் பொறுப்பும் அவருக்கு ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் சிறந்த செய்தியாளருக்கான விருதை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் 2003ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவித்திருந்தது.

இந்நிலையில் அதே ஆண்டில் நெருக்கடியான சூழ்நிலைகளில் யாழ்ப்பாணத்தில் அவர் ஆற்றிய செய்திசேவைக்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தால் சிறப்பு விருது வழங்கப்பட்டது.

அத்துடன், தில்லைநாதனின் சேவையைப் பாராட்டி பருத்தித்துறை பிரதேச செயலகம் கலைப்பரிதி, கலைச்சாகரம் ஆகிய பட்டங்களை வழங்கிக் கௌரவித்தது. வடமராட்சி பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் பலவும் தில்லைநாதனின் ஊடகசேவையைப் பாராட்டி கௌரவித்தன.

அரை நூற்றாண்டும் அதிகமான காலமாக ஊடகத்துறையில் பணியாற்றிவரும் அவர் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் தனது பங்களிப்புகளைச் செய்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

### அல்ஹாஜ் எம்.ஏ.எம்.நிலாம்



மினுவாங்கொடை கள்லொளுவையைச் சேர்ந்த அல்ஹாஜ் எம்.ஏ.எம்.நிலாம், 55 வருடங்களுக்கு மேற்பட்ட ஊடக அனுபவத்தைக் கொண்டவராவார்.

1977ஆம் ஆண்டு பிராந்திய செய்தியாளராக ஊடகப் பணியை ஆரம்பித்த அவர், சுமார் 55 வருட காலமாக முழு நேர ஊடகவியலாளராகப் பணி புரிந்தார். வீரகேசரி, தினக்குரல், தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியதுடன், இறுதியாக தினகரனின் ஆலோசகராகப் பணிபுரிந்தார். தமிழுக்கு மேலதிகமாக இவருக்கு ஆழ்ந்த சிங்கள அறிவு இருந்ததன் காரணமாக பத்திரிகைத்துறையிலே இவருக்கு முன்னணி வகிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

கலாசார அமைச்சு வழங்கிய கலாபூசணம் விருது பெற்ற இவர், தமிழ் ஊடகவியலாளர் சங்கம், முஸ்லிம் ஊடக மன்றம் ஆகியன வழங்கிய விருதுகளையும் பெற்றார். 2015ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்தது.

பதினெட்டாவது வயதில் எழுத்து துறையில் பிரவேசித்த அவர், 77 வயதாகியும் இன்று வரை தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு கவிதை நூல்களை வெளியிட்டுள்ள இவர், நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதி இருக்கிறார்.

இலங்கை முஸ்லிம் ஊடக மன்றத்தின் பொதுச்செயலாளர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் போன்ற பதவிகளை வகித்த அவர், தற்போதும் உப தலைவராகப் பதவி வகித்து வருகிறார். நூல் என்ற புனைப்பெயரில் இலக்கிய உலகுக்குப் பிரவேசித்த இவர், தமிழ் சங்கம் உட்பட இந்தியாவில் இருக்கின்ற பல இலக்கிய அமைப்புகளால் பாராட்டப்பட்டுள்ளார்.

# அரங்கேற்றப்படும் ஏமாற்று நாடகமும்; மகா நடிகர்களான தலைமைகளும்

அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுத்து நாட்டின் பொருளாதாரத்தை தலைநிமிரச் செய்வதற்கு பெரும் பங்கு வகித்துக்கொண்டிருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முதுகெலும்பு கூனிக்கொண்டே போகிறது. அவர்களுடைய வாழ்க்கைகளையும் ஒளியேற்றுவதற்கான சிந்தனை அம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைகளிடத்தில் துளிர்விடவே இல்லை.

எங்கே? முன்னேறிவிட்டார்கள் எனின், தத்தமது பிரதேசங்களைவிட்டு வெளியேறிவிடுவார்கள். அப்படியாகி விட்டால், தங்களுடைய அரசியல் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்ற சின்னத்தனமான எண்ணத்தில் இருந்து செயற்படுவதை கைவிடும் எண்ணம் எவருக்குமே இல்லை.

எனினும், தங்களுடைய பெற்றோர், பெருந்தோட்டத் தொழிலாளிகளாக இருந்தாலென்ன, தாங்கள் நல்லதொரு நிலைக்கு வந்துவிடவேண்டுமென உழைத்துக்கொண்டிருப்போரும் இருக்கத்தான் செய்கின்றனர். பலரும் பெருந்தோட்டங்களை விட்டு வெளியேறிவிட்டனர்.

நாளொன்றுக்கான மூவேளை சாப்பாட்டுக்கான செலவே ஆயிரம் ரூபாயைக் கடந்துவிடுக்கின்றது. கூலித்தொழில் செய்வோரில் பலரும், நாளொன்றுக்கு மூவாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளமாகப் பெறுகின்றனர். ஆனால், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மட்டும் நாளொன்றுக்கு 1,000 ரூபாயை பெற்றுக்கொள்ள, கைகளை ஏந்தி பிச்சையெடுக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால், அத்தொழிலாளர்களிடமிருந்து எக்கச்சக்கமாக சுரண்டப்படுகின்றது. மாதாந்தம் அறவிடப்படும் சந்தாப்பணத்தை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு தோட்டங்களுக்கும் ஏதாவதோர் அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்தலாம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இருக்கும் வரையில்தான் உங்களுக்கு வாக்குகள் கிடைக்கும் என்பதை மலையஞ்சார் அரசியல்தலைமைகள் மறந்துவிடக்கூடாது. கல்வி கற்றவர்கள் தொழில்களைத் தேடி, வெளிமாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து, அங்கேயே நிரந்தமாக குடியேறிவிட்டார்கள் எனில், உங்கள் இருப்பு கேள்விக்குறியாகிவிடும்.

இதற்கிடையே, நாளாந்த சம்பளத்தை அதிகரிக்கவேண்டுமென பேச்சு அடிபடுகின்றது. அதனை பிடித்துக்கொண்டு ஒவ்வொரு தலைமைகளும் காவடியெடுத்து ஆடத்தொடங்கிவிட்டனர். ஊடகங்களுக்கு அறிக்கைவிடுவோர் முதலாளிமார் சம்மேளத்துக்கு முன்பாக ஊமைகளாகிவிடுகின்றனர். பாரிய தொகையை சம்பளமாக வழங்கி, இழப்பதை விரும்பாத முதலாளிமார் சம்மேளம், கூத்தாடிகளுக்கு இறைத்துவிடுகின்றன.

தொழிற்சங்கம், அரசியலை பிரித்து கையாளும் திறனை தலைமைகள் கொண்டிருக்கவில்லை. தொழிற்சங்களில் சந்தாதாரர்கள் இருப்பதால், அம்மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் இல்லை. தொழில்துறைகளைச் சேர்ந்தவர்கள் சந்தாதாரர்களாக இருக்கவேண்டுமென்றால், ஏனைய தொழில்துறைகளைச் சேர்ந்தவர்கள் எந்த தொழிற்சங்கங்களுக்குச் சந்தா கட்டுகின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காகவேனும், கட்சி அரசியல் பேதத்தைப் புறந்தள்ளிவிட்டு, மலையக தலைமைகள் ஓரணியில் திரண்டு, குரல்கொடுக்கவேண்டும். கடந்தகாலங்களில் பலமுறை வலியுறுத்தியபோதிலும், அது செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே இருந்தது. மலையகம்-200 அல்ல மலையகம் 400யை கடந்தாலும், அம்மக்களுக்கான தலைமைகள் ஓரணியில் திரளவே மாட்டார்கள் என்பதே யதார்த்தமாகும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனத்தை வதைக்க, அவர்களுக்கே உரிமையில்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடியே இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேக சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப் பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது.

எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

இதனால் தேகம் அல்லாடும். எனவே, மனிதன் நிம்மதியாக வாழ, புலன் அறிவைத் தெளவாக வைத்திருக்க வேண்டும். நல்லதை மட்டும் உறிஞ்சும் திறனை வளர்த்திடுக.

நன்றி –பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

தமிழர் அரசியல்

# சர்வதேசளவில் பின்னப்படும் புதிய வலை

**லக்ஸ்மன்**

தமிழர் அரசியலில் இரண்டு வரலாற்று முயற்சிகள் கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அவற்றின் பலன் தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நல்லதொரு முடிவினை கொடுப்பதாக இருக்குமா என்பதுதான் சந்தேகமானது.

இலங்கைக்கெதிராக இறுக்கமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான பிரித்தானிய பாராளுமன்ற விவாதம், மற்றையது உலகத் தமிழ்ப் பேரவையின் இலங்கை வருகையும் அவர்களது பேச்சுவார்த்தை முயற்சிகளும் தான் அவைகள்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஊடான மனித உரிமைக்கெதிரான துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பிரித்தானிய அரசு மென்மையான போக்கை கடைபிடிப்பது தவறு என்று பிரித்தானிய பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டு பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை அரசு மீது பிரித்தானியா என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்ற கேள்வியை இதன்போது எழுப்பியிருந்தனர்.

இருந்தாலும், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளுக்குப் பிரித்தானிய அரசு கடும் நடவடிக்கைகள் எதையும் எடுக்காது அல்லது அதற்கான சாத்தியக்கூறு இருப்பதாகத் தோன்றவில்லை என்பதே விவாதம் தொடர்பான கருத்துக்களாக வெளிவந்திருக்கின்றன.

பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களது கோரிக்கைகளில் முக்கியமானதாக இலங்கையில் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் மீது தடைகள் விதிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில், இலங்கை மீது திட்டமிட்ட வகையில் தடைகள் விதிக்கப்படல் போன்றவை காணப்பட்டன.

குறிப்பாக இந்த விவாதத்தில், இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவார்கள் மற்றும் துஷ்பிரயோகம் செய்தவர்கள் மீது 'மாக்னிட்ஸ்கி உட்கூறு' அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதைப் பிரித்தானிய அரசு ஆராயுமா? என தொழிற்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் மெண்டோனால், வெளிவிவகாரம், பொதுநல வாய நாடுகள் மற்றும் அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் லியோ டொக்செரியிடம் கேள்வி எழுப்பினார். ஆனால், பிரித்தானிய அரசில் ஐரோப்பிய விடயங்களுக்கும் பிரதி அமைச்சராக இருக்கும் அவர், "இந்த அரங்கிலிருந்து கொண்டு அது பற்றி நான் கருத்து தெரிவிப்பது முறையாக இருக்காது" என்று அக் கேள்வியைப் புறந்தள்ளியுள்ளார். அதே நேரத்தில், "மனித உரிமைகள் தொடர்பான கடப்பாடுகளைப் பின்பற்றி நிலைமாறு நீதி மற்றும் சட்ட ரீதியிலான சீரமைப்புகள் குறித்து இலங்கை அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம்" என்று அறிவித்திருக்கிறார்.

நல்லிணக்கம் பற்றியும் நிலைமாறு கால நீதிச் செயற்பாடு குறித்தும் பல வருடங்களாகக் கோரி வரும் சர்வதேச நாடுகளின் செயற்பாடுகளுக்கு இதுவரையில் இலங்கை அரசாங்கம் சரியானதொரு முன்னெடுப்பினை மேற்கொள்ளவில்லை. ஆனால், கண்துடைப்புச் செயற்பாடுகளே நடைபெற்றிருக்கின்றன. இருந்தாலும், அண்மைய அறிவிப்புகளின் படி இலங்கை அரசாங்கம் நிலைமாறு காலச் செயற்பாட்டுக்கான ஆணைக்குழு ஒன்றை நியமனம் செய்வதற்கான சட்டமூலம் ஒன்றை உருவாக்குவதற்குரிய வேலைகளை இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 15 வருடங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை போர்க்குற்றவாளிகளைத் தப்பிக்கவைக்கும் அல்லது அவர்களுக்கான தண்டனை வழங்கலுக்குக் காலம் தாழ்த்துவதையே காட்டுகிறது.

உரிய கவனம் செலுத்தப்படாத மனித உரிமை மீறலுக்கெதிரான செயற்பாடுகளுக்கு 'மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்களின் சொத்துக்களை முடக்கி, அவர்கள் ஒரு நாட்டிற்குள் நுழைவதற்குத் தடைவிதிக்க வழி செய்யும் நடைமுறையான 'மாக்னிட்ஸ்கி உட்கூறு' எவ்வாறு பிரித்தானியாவில் பிரயோகிக்கப்பட வழி செய்யப்படும் என்பது கேள்வியாகும்.

துன்பம் நிறைந்த நீண்ட நெடுங்கதையாக இருக்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கெதிராக பேரினவாத அரசாங்கம் 1983ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை கலவரத்தில் 3,000 தமிழர்கள் கொல்லப்பட்டது முதல் முள்ளிவாய்க்கால் அவலம் வரையில் பல இலட்சக்கணக்கான தமிழர்களுடைய உயிர்களைப் பறித்திருக்கிறது.

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு முன்னெடுத்த குற்றங்களை இனப்படுகொலையாக அங்கீகரிக்க வேண்டுமெனப் பல பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரித்தானிய அரசை வலியுறுத்தினர். தொழிற்கட்சியைச் சேர்ந்த சியோபான் மெக்டொனால்ட் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவு பெற்ற காலத்தை நினைவுகூர்ந்து பேசினார். "கடற்கரைகளில் இறந்து கிடந்தவர்களை அவர்களது உறவினர்களால் அப்புறப்படுத்த முடியவில்லை, ஏனென்றால் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை அரசு அவர்கள் மீது கொத்தணி குண்டுகளை வீசுக் கொண்டிருந்தது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த கூட்டத்தில் பேசிய பலர் இறுதிகட்ட யுத்தத்தின்போது போர்க் குற்றங்களை முன்னெடுத்த இராணுவத்தின் முன்னாள் தளபதிகள் சவேந்திர சில்வா மற்றும் ஜகத் ஜயசூரிய ஆகியோரை அரக்கர்கள் என்று வர்ணித்திருக்கின்றனர்.

தமிழர்களின் இறைமையைச் சிங்களவர்களுக்குத் தாரைவார்த்த 1948 சுதந்திரம் வழங்கல் என்ற நாடகத்தினை அரங்கேற்றிமுடித்த பிரித்தானிய அரசு தீர்வைப் பெற்றுக் கொடுக்கின்ற, நிரந்தரத் தீர்வை வழங்குகின்ற நிலைக்கு எப்போது வந்து சேரும் என்ற கேள்வி இப்போதும் இருக்கிறது என்பது உண்மையாகும். இலங்கையில் இடம்பெற்ற அட்டூழியங்கள் மற்றும் இனப்படுகொலைகள் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்படுவது ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணைகள், தீர்மானங்கள் போன்றவற்றின் மூலம் நடைபெறுவதாகவே பார்க்கப்படுகின்ற நிலையில் நடைபெற்ற பிரித்தானிய பாராளுமன்ற விவாதம் எதனைச் செய்யும் என்பது பலரதும் எதிர்பார்ப்பே.

இதற்கிடையில் உலகத் தமிழர் பேரவையினரின் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றத்துடன் இணைந்ததான ஜனாதிபதி ரணில் சந்திப்பு சர்வதேச அளவில் உள்ள தமிழர்களிடம் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. நல்லிணக்க செயல்முறைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவும் வகையில் உலக தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. சுரேன் சுரேந்திரன் தலைமையிலான உலக தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மஹா நாயக்க தேரர்கள், தேசிய சமாதான பேரவையினர் ஆகியோரை இக்குழு சந்தித்ததுடன், வடக்குக்கு விஜயம் செய்யாது அரசியல், சிவில் பிரதிநிதிகளையும் சந்தித்து நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். புலம்பெயர் இலங்கையர்கள் நாட்டின் அபிவிருத்தி திட்டங்களில் பங்களிப்பு செய்ய வேண்டும் என ஜனாதிபதி ரணில் பகிரங்கமாக அழைப்பு விடுத்ததன் ஒரு படியாக இந்த விஜயம் அமைந்திருக்கிறது. தடைகள் விதிக்கப்பட்டிருந்த அமைப்புக்களுக்குத் தடை நீக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் இது ஒரு நாடி பிடிப்பாகவும் அமைந்திருக்கிறது.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் பின்னர் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை, இலங்கையின் உள்ளக அபிவிருத்தி திட்டங்களுக்குள் உள்வாங்கும் இலக்கினை ரணில் அறிவித்திருந்தார். அதற்கானதொரு அலுவலகத்தை இலங்கையின் மூத்த இராஜதந்திரிகளின் ஒருவரான வீ.கிருஷ்ணமூர்த்தியைப் பணிப்பாளராகக் கொண்டு நிறுவினார். அந்த அலுவலகத்தின் ஊடாகவே உலக தமிழர் பேரவை அரசாங்கத்துடன் பேச்சை நடத்தியிருக்கிறது. உலகத் தமிழர் பேரவையின் முயற்சிக்கு பல்வேறுபட்ட வகையிலும் விமர்சனங்கள் இருந்தாலும், இமயமலைப் பிரகடனம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுக் கலந்துரையாடல் நடைபெற்றிருக்கிறது. புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். அஸ்கிரிய மல்வத்து பீடங்களின் பீடாதிபதிகள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எம்மால் தடையில்லை என்று கூறியிருக்கிறார்கள். இவை ஒருவகையில் பச்சைக் கொடியாக இருந்தாலும் கடந்த கால அனுபவங்கள், இழுத்தடிப்புகள், ஏமாற்றுகள் தமிழர்களைச் சந்தேகிக்கவே தூண்டியிருக்கிறது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினைக்குரிய தீர்வைத் தேடும் இலங்கை அரசாங்கம், தமிழர்களது இனப்பிரச்சினை விடயத்தில் நல்லெண்ணச் சமிக்ஞைகளைக் காண்பிப்பதாகப் பாவனை செய்துவிட்டு, தம்முடைய காரியங்களை நிறைவேற்றவே முயற்சிப்பர் என்பதுவே முக்கிய சந்தேகமாகும். இந்த வகையில்தான் கடந்த காலங்கள் போலவே சர்வதேச அளவில் தமிழர்களை ஏமாற்றும் வலைகள் பின்னப்பட்டு வருவதாகவும், தீர்வு விடயத்தில் தமிழர்களை பிரச்சினைக்குரியவர்களாகக் காண்பிக்கும் முயற்சியாகக் கூட இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இது அநியாயமானதுமல்ல.

## கடிதங்கள்

### பாலத்தை பாருங்கள்

நாவலப்பிட்டி-பஸ்பாவின் கோரளை பிரதேச சபைக்கு உட்பட்ட 1.7 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நாவலப்பிட்டி தண்டு பந்திருப்பு வெலிகொடவத்தை வீதியில் கால்வாயின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீட் பாலம் உடைந்து வீழ்ந்துள்ளமையினால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தப் பாலத்தின் ஊடாக நாவலப்பிட்டி, தாதுபதிருப்ப, வெலிகொடவத்தை ஆகிய கிராமங்களில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது அன்றாட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

சுமார் 12 ஆண்டுகளுக்கு முன் கொங்கிறீட் பாலமாகக் கட்டப்பட்ட இந்த பாலம், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த கடும் மழையால் உடைந்ததையடுத்து, கிராம மக்கள் உதவியுடன் போக்குவரத்துக்காகத் தற்காலிக பாலம் நிர்மாணிக்கப்பட்டது.

அண்மையில் பெய்த கடும் மழையால், அப்பகுதியில் தற்காலிக பாலமும் உடைந்துள்ளதாகவும் நிரந்தரமாக பாலமொன்றை நிர்மாணித்து தருமாறு, பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கோரிக்கை விடத்துள்ளனர்.

ரஞ்சித் ராஜபக்ஷ



சுகாதார பராமரிப்புத் துறையில்

# ஜப்பான் மேலும் பங்களிப்பு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு மருத்துவ சாதனங்களை இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி கையளித்திருந்தார். இந்த கையளிப்பு நிகழ்வில் சுகாதாரத்துறை அமைச்சர் கலாநிதி. ரமேஷ் பத்திரன மற்றும் சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி. சீதா அரம்பேபொல ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரு நாடுகளுக்குமிடையிலான ஆழமான பந்தத்தை உறுதி செய்யும் வகையிலும், இலங்கையின் சுகாதார பராமரிப்பு உட்கட்டமைப்பை உறுதி செய்யும் வகையிலும் இந்த அன்பளிப்பு அமைந்திருந்தது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு அத்தியாவசியமான வைத்திய உபகரணங்களைக் கையளிக்கப்பட்டிருந்தது. அதனூடாக வைத்தியசாலையினால் தரமான சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக்கொடுக்கும் ஆற்றல் மேம்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு அன்பளிப்பு செய்யப்பட்ட சாதனங்களில் மயக்கமருந்தளிக்கும் பகுதி, தன்னியக்கமயப்படுத்தப்பட்ட ரிபரக்டோ மீற்றர், மூன்று தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள், மீட்டல் படுக்கை, மூன்று Slit விளக்குகள், ஐந்து படுக்கை அருகில் பேணப்படும் கண்காணிப்பான்கள் மற்றும் ஒரு சத்திர சிகிச்சை சாதன தொகுதி போன்றன அடங்கியிருந்தன. இலங்கையின் சுகாதார பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துவதில் ஜப்பான் வழங்கும் ஆதரவுக்கான அர்ப்பணிப்பின் அங்கமாக இந்த பங்களிப்புகள் அமைந்துள்ளன.



இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி தெரிவிக்கையில், "முதல் தொகுதி சாதனங்களை இன்று கையளிப்பு செய்வதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதனூடாக இலங்கையில் சுகாதார பராமரிப்பை மேம்படுத்துவதற்கான எமது அர்ப்பணிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. சுகாதார பராமரிப்பு துறையில் ஜப்பான் மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையிலான ஒன்றிணைந்த செயற்பாட்டை இந்த இணைந்த செயற்பாடு உறுதி செய்வதாக அமைந்திருப்பதுடன், நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதாகவும் உள்ளது.

பாரிய நன்கொடை வழங்கும் திட்டத்தின் ஆரம்பமாக இந்த கையளிப்பு அமைந்துள்ளது. எமது அர்ப்பணிப்பின் பிரகாரம், எதிர்காலத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் மேலும் மருத்துவ சாதனங்கள் நிறுவப்படும். இலங்கையின் சுகாதார பராமரிப்பு வசதிகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதில் ஜப்பான் காண்பிக்கும் அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில் இந்த பங்காண்மை அமைந்துள்ளது.

# SHMA இன் முதலாவது திறன் நிலையம் ஆரம்பம்

பவர் என அறியப்படும் ஏ.பவர் அன்ட் கம்பனி பிரைவட் லிமிடெட்டின், சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ அகடமி பிரைவட் லிமிடெட் (SHMA), நாட்டின் விருந்தோம்பல் துறையில் இளைஞர்களை உயர்ந்த ஸ்தானத்துக்கு கொண்டு செல்ல வலுவூட்டும் வகையில், நிலைபேறான வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான (SSG) முதலாவது திறன் நிலையத்தை மாத்தளை மாவட்டத்தின் நாவுல தேசிய இளைஞர் படைகள் பயிற்சி மையத்தில் நிறுவியுள்ளது.

மாத்தளை மாவட்டத்தை சூழ்ந்து காணப்படும் ஹோட்டல்களில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு மற்றும் அப்பிரதேசத்தில் காணப்படும் குறைந்த வருமானமீட்டும் மாணவர்களின் சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய இளைஞர் படைகள் பயிற்சி மையத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் SHMA கைச்சாத்திட்டது. இதனூடாக கட்டம் கட்டமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறான நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

பவர் மற்றும் சுவிட்சர்லாந்து வெளி விவகார பெடரல் திணைக்களத்தின் சர்வதேச ஒன்றிணைவின் (FDFA) முகவர் அமைப்பான அபிவிருத்தி மற்றும் ஒன்றிணைவுக்கான சுவிஸ் முகவர் அமைப்பு ஆகியவற்றுக்கிடையிலான தனியார் மற்றும் பொது பங்காண்மையாக SSG நிகழ்ச்சித் திட்டம் அமைந்துள்ளது.

தற்போது, நாவுல தேசிய இளைஞர் படை பயிற்சி நிலையத்தில் மொத்தமாக 54 மாணவர்கள் இணைந்துள்ளனர். இந்நிலையத்தை தமித அல்விஸ்



ஆரம்பித்துள்ளதுடன், மாணவர்களை இணைத்து, நிலையத்தினூடாக அவர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார். சுவிஸ் தொழிற்பயிற்சி திறன் விருத்தி பாடவிதானத்தின் பிரகாரம் அமைந்துள்ள இந்த பயிற்சிநெறி, 3 மாத கால வகுப்பறை பயிற்சிகளையும், ஒன்றரை மாத கால இணைந்த பயிலல்களையும், நான்கரை மாத காலப் பகுதியை நட்சத்திர ஹோட்டலில் தொழிற்பயிற்சியையும் கொண்டுள்ளது. மேலும், குறைந்த வசதிகள் படைத்த மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் மென் திறன் விருத்தி பயிற்சிப் பட்டறைகள் முன்னெடுக்கப்படுவதுடன், விருந்தோம்பல் துறையில் அவர்களுக்கு முன்னேறுவதற்கு அவசியமான சிந்தனைகளை கொண்டிருக்கவும் உதவியாக அமைந்திருக்கும்.

மாணவர்கள் மத்தியில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், குழுநிலை கட்டியெழுப்பல் செயற்பாடுகள் மற்றும் பிரத்தியேக விருத்தி போன்றவற்றை ஏற்படுத்துவதற்காக 14 நாள் வாழ்க்கைத் திறன் பயிற்சிகளையும் தேசிய இளைஞர் படைகள் பயிற்சி மையம் வழங்குகின்றது. தேசிய இளைஞர் படைகள் பயிற்சி நிலையத்தில் இணைந்து கொள்ளும் ஒவ்வொரு மாணவரிலும் இதனை அவதானிக்க முடிகின்றது. மாணவர்களுக்கு Learning Management System (LMS) ஐ அணுகும் வசதி வழங்கப்படுவதுடன், அதனூடாக தமது கற்கை செயற்பாடுகளை சௌகரியமாக முன்னெடுக்கக்கூடியதாகவுள்ளது. இந்த புதிய வழிமுறையினூடாக ஒவ்வொரு மாணவரும் கண்காணிக்கப்பட்டு, அவர்களில் போதியளவு கவனம் செலுத்தப்படுகின்றது.

SSG நிகழ்ச்சித் திட்டத்துக்கு பல்வேறு ஹோட்டல்கள் தமது ஆதரவை வழங்கியுள்ளதுடன், மாணவர்களுக்கு இணைந்த பயிலல் மற்றும் தொழிற்பயிற்சி வாய்ப்புகளை வழங்கவும் முன்வந்துள்ளன. SSG திட்டத்தினூடாக 2025ஆம் ஆண்டளவில் 2240 திறன் படைத்த இளைஞர், யுவதிகளை இந்தத் துறையில் தயார்ப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், விருந்தோம்பல் கல்வியை தொடரும் பெண்களின் எண்ணிக்கையை 40% ஆக உயர்த்தவும் திட்டமிட்டுள்ளது. செயற்திட்டத்தின் மூன்றில் இரண்டு பாடவிதானம் பிரயோக, தொழில்நிலைசார் பயிற்சியாக அமைந்திருப்பதுடன், தொழிற்பயிற்சியுடன், பல்வேறு ஹோட்டல்களில் தொழில் நிலை நீடிப்புகளையும் பெற்றுக் கொள்ள முடியும். இதனூடாக தற்போது விருந்தோம்பல் துறைசார் கல்வியில் காணப்படும் சவால்கள் நிறைந்த செயன்முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

SHMA இல் காணப்படும் பரந்த மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களினால், தேசிய இளைஞர் படைகள் பயிற்சி நிலையத்தில் ஆற்றல் படைத்த மற்றும் தொழில்புரியக்கூடிய இளைஞர்களை உருவாக்குவதில் நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளிக்கப்படுவதுடன், SSG செயற்திட்டத்துக்கு தேசிய இளைஞர் படைகள் பயிற்சி நிலையம் தொடர்ந்தும் ஆதரவளிக்கின்றது.

SHMA முன்னெடுத்திருந்த ஆய்வில், 92.3% ஆன மாணவர்களுக்கு தமது தற்போதைய தொழில் நிலையத்தில் அல்லது புதிய நிறுவனத்தில் பதவி உயர்வுகளைப் பெற முடிந்தது, 75%க்கும் அதிகமான மாணவர்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் பணிபுரிகின்றமை மற்றும் பலருக்கு தமது வருமானமீட்டும் கொள்ளளவு அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டிருந்தது.

# ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி வெற்றியாளராக தெரிவு



ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் துணை நிறுவனமான ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி, இந்தியாவின், மும்பை நகரில் நடைபெற்ற நான்காவது Emerging Asia காப்புறுதி ஒன்றுகூடல் மற்றும் விருதுகள் 2023 நிகழ்வில், காப்புறுதி பரவலாக்கத்துக்கா சிறந்த தந்திரோபாயங்கள்-இலங்கை எனும் விருதை சுவீகரித்தது.

இந்திய வர்த்தக சம்மேளனத்தினால் (ICC) ஏற்பாடு செய்யப்பட்ட Emerging Asia காப்புறுதி ஒன்றுகூடல் மற்றும் விருதுகள் நிகழ்வினூடாக, ஆசியாவின் சிறந்த காப்புறுதி சேவை வழங்குநர்களின் சாதனைகளை கௌரவிக்கப்படுகின்றது. பிராந்தியத்தில் காப்புறுதியை ஊக்குவிப்பதற்கு பங்களிப்பு வழங்கும் முயற்சிகளை ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது.

கிளைகளின் எண்ணிக்கை, முகவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் வளர்ச்சி வீதம், CAGR திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் சமூகத்தினுள் காப்புறுதி அணுகலை அதிகரிக்கச் செய்வதற்காக டிஜிட்டல் செயற்பாடுகளை பின்பற்றல் போன்ற பல்வேறு முக்கியமான காரணிகளை கவனத்தில் கொண்டு கடுமையான வினைத்திறன்சார் மதிப்பீட்டைத் தொடர்ந்து, ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சிக்கு இந்த விசேட ICC விருது வழங்கப்பட்டது. இலங்கைக்கு மேலதிகமாக, பங்களாதேஷ், பூட்டான், மியன்மார், நேபாளம், தாய்லாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இதில் அடங்கியிருந்தன. இந்தியாவின் PriceWaterhouseCoopers (PwC) இனால் வெற்றியாளர் தெரிவு செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தன.

ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி தவிசாளர் ரமல் ஜாசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "இந்த பெருமைக்குரிய விருது என்பது, எமது அணியினரின் அர்ப்பணிப்பு மற்றும் ஒப்பற்ற ஈடுபாடு ஆகியவற்றுக்கான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இந்திய வர்த்தக சம்மேளனத்தினால் வழங்கப்படும் இந்த கௌரவிப்பினூடாக, தொடர்ந்தும் புத்தாக்கமாக இயங்கும் எமது எதிர்பார்ப்புக்கு வலுவூட்டப்படுவதுடன், புத்தாக்கமான ஆயுள் காப்புறுதித் தீர்வுகளை நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து, அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கு பங்களிப்புச் செய்ய உதவியாகவும் அமைந்திருக்கும்." என்றார்.

ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம அதிகாரியான கலாநிதி. கெளும் சேனநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "நிறுவனத்துக்கும் நாட்டுக்கும் கிடைத்த இந்த கௌரவம் தொடர்பில் நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். எமது ஊழியர் வளங்களை மேம்படுத்துவதில் நாம் தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொண்டு வருவதுடன், வாடிக்கையாளர்களை மையப்படுத்திய பல்வேறு தந்திரோபாயங்களை பின்பற்றுவது தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றோம். அதனூடாக, அனைவராலும் ஆயுள் காப்புறுதியை அணுகக்கூடியதாக இருக்கும். இந்த நெருக்கடியான காலப்பகுதியில் மீண்டெழுந்திறனுடனான எமது செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்துக்கான நோக்கு பெரும் வாய்ப்புகள் நிறைந்ததாக அமைந்துள்ளன. ஆயுள் காப்புறுதித் துறையில் சிறப்பை எய்தும் இலக்கை நோக்கி நாம் தொடர்ந்தும் இயங்குவோம்." என்றார்.

ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி நிலுஷன் குணவர்தன கருத்துத் தெரிவிக்கையில், "காப்புறுதி பரவலாக்கத்தில் நாம் மேற்கொண்டிருந்த மூலோபாய செயற்பாடுகளில் காண்பித்திருந்த எமது முயற்சிகள், சாதனைகள் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றுக்கு இந்த கௌரவிப்பு கிடைத்துள்ளது. பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு காப்புறுதித் தீர்வுகளை வழங்குவது மற்றும் கட்டுப்பணக் கொடுப்பனவுகளை டிஜிட்டல் முறையில் செலுத்தல் முதல் பிராந்திய விளையாட்டு நிகழ்வுகளினூடாக கிராமத்து மற்றும் பின்தங்கிய சமூகங்களுடன் தொடர்புகளை பேணுவது வரை, காப்புறுதி விழிப்புணர்வை ஏற்படுத்த நாம் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். மேலும், PwC போன்ற முன்னணி நிறுவனத்தினால் எமது சாதனைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டமையினூடாக, எமது சாதனைகள் மீள உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சிக்கு, ஆயுள் காப்புறுதியை பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான நோக்கு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியன மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது." என்றார்.

வாழ்க்கைக்கு காப்புறுதியை வழங்குவதற்கான அர்ப்பணிப்பை கொண்டிருப்பதையிட்டு ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி பெருமை கொள்வதுடன், உலகத் தரம் வாய்ந்த இடர் காப்பீட்டுத் தீர்வுகளை சுகாதார காப்புறுதி, தவணை காப்புறுதி, கல்வி, முதலீடு, ஓய்வூதியம், குழுக் காப்புறுதி, கடன் பாதுகாப்பு மற்றும் நிவாரணத் திட்டங்கள் போன்றவற்றினூடாக வழங்குகின்றது.

# Saegis கம்பஸ் பட்டமளிப்பு விழா

Saegis கம்பஸ் தனது பட்டமளிப்பு விழாவை அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் முன்னெடுத்திருந்தது. இந்நிகழ்வில் 513 மாணவர்களுக்கு பட்டமளிக்கப்பட்டிருந்தது. Saegis Convocation எனும் தலைப்பில் இந்த பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் களனி பல்கலைக்கழக உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் நிலந்தி டி சில்வா விசேட அதிதியாகவும், ஐக்கிய இராஜ்ஜியத்தின் Canterbury Christ Church பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியான பேராசிரியர் மொஹமட் அப்தெல்-மக்குயிட் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர். இதர விசேட விருந்தினர்களில், இலங்கை கல்வி அமைச்சின் அரச சாரா உயர் கல்வி பிரிவின் மேலதிக செயலாளர் எச்.டி.சி.ஜானகி மற்றும் Pearson UK இன் பிரதி பொது முகாமையாளர் சூரிய பிபிலே ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் வரவேற்புரையை, Saegis கம்பஸ் தவிசாளரும், சக்யா குரூப் ஒஃவ் ஹயர் எடியுகேஷன் தவிசாளர் பண்டார திசாநாயக்க ஆற்றியிருந்தார். அவரைத் தொடர்ந்து Saegis கம்பஸ் உப வேந்தர் பேராசிரியர் நாலக ஜயகொடி, பட்டங்களை வழங்கியிருந்தார்.

வழங்கப்பட்ட கற்கைகளில் Canterbury Christ Church பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட Master of Business Administration, BSc (Hons) Business Management and BSc (Hons) Accounting and Finance போன்றன அடங்கியிருந்ததுடன், Saegis கம்பஸினால் வழங்கப்பட்ட Bachelor of Information Technology மற்றும் Bachelor of Business Administration பட்டங்கள் அடங்கியிருந்தன. இவற்றுக்கு கல்வி அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கிகாரமும் வழங்கப்பட்டிருந்தன.

மேலும், வழங்கப்படும் ஏனைய தகைமைகளில் வியாபார முகாமைத்துவம் மற்றும் மென்பொருள் பொறியியல் ஆகியவற்றில் Pearson BTEC HND, மற்றும் Scottish Qualifications Authority (SQA) இடமிருந்து வணிகம் மற்றும் கணனி விஞ்ஞானம் ஆகியவற்றில் உயர் டிப்ளோமா ஆகியன அடங்கியுள்ளன.

உயர் செயற்திறன் வாய்ந்த மற்றும் திறமையான மாணவ பட்டதாரிகளை உருவாக்கும் தனது இலக்கை நோக்கி தொடர்ந்து பயணிப்பதுடன், தமது அறிவையும் திறன்களையும் மேம்படுத்திக் கொள்ளும் கல்விப் பயணத்தில் பொருளாதாரத்துக்கும், சமூகத்துக்கும்



பல்வேறு வழிகளில் பங்களிப்பு வழங்குவார்கள். நுகேகொட பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்துள்ள Saegis கம்பஸ், நவீன கல்வி வசதிகளுடன் பயிலும் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதுடன், மாணவர்களின் நலன் கருதி பல்வேறு சேவைகளையும் வழங்குகின்றது.

Saegis கம்பஸினால் மாணவர்களுக்கு கல்வி அமைச்சு அனுமதியளிக்கப்பட்ட பட்டப்படிப்பு, அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட மாணவர்களுக்கான வட்டியில்லாத கடன் வசதிகள் போன்றன அடங்கலாக உத்தரவாதத்துடனான தொழிற்துறை நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

உலக தலைவர்கள் பட்டியலில்

# மோடி முதலிடம்



சர்வதேச ஆராய்ச்சி நிறுவனமான 'மார்னிங் கன்சல்ட்', உலகளாவிய தலைவர்களின் பிரபலம் குறித்த மதிப்பாய்வு நடத்தியது. அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 'உலகளவில் பிரபலமான தலைவர் என்ற பட்டியலில் பிரதமர் மோடி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். அவருக்கு 76 சதவீத அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதற்கு அடுத்த இடத்தில் மெக்சிகோவின் ஜனாதிபதி ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோருக்கு 66 சதவீதம், மூன்றாவது இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்தின் பிரதமர் அலைன் பெர்செட்டுக்கு 58 சதவீதம் பெற்றுள்ளனர்.

பிரேசில் ஜனாதிபதி லுலா டா சில்வா நான்காவது இடம், ஆவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். ஆறாவது இடத்தில் இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி உள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் ஆகியோர் முதல் ஐந்து இடங்களுக்குள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐதராபாத்

## பழைய 2 ரூபாய் நோட்டுக்கு பிரியாணி







ஐதராபாத் பிரியாணி பெயரைக் கேட்டாலே ருசிக்க தோன்றும். சுவையான இந்த பிரியாணியை பலரும் விரும்பி உட்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஐதராபாத்தில் பிரபல ஹோட்டல் நிர்வாகம் ஒன்று 2 ரூபாய்க்கு பிரியாணி வழங்கப்படும் என அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதனைக் கண்ட அசைவ பிரியர்கள் ஹோட்டல் முன்பு குவிந்துள்ளனர். அப்போதுதான் ஹோட்டல் நிர்வாகம் ஒரு நிபந்தனையை விதித்துள்ளது. அதாவது, பழைய 2 ரூபாய் நோட்டுகள் தந்தால் மட்டுமே 2 ரூபாய்க்கான பிரியாணி வழங்கப்படும் என தெரிவித்துள்ளது.


இதனை கேட்ட வாடிக்கையாளர்கள் பலர் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். ஒரு சிலர் தங்கள் வீடுகளில் வைத்திருந்த பழைய 2 ரூபாய் நோட்டுகளை ஹோட்டலுக்கு எடுத்து சென்று குடும்பத்துடன் ஐதராபாத் பிரியாணி உட்கொண்டுள்ளனர்.

இது குறித்து ஹோட்டல் நிர்வாகத்தினர் கூறுகையில், "பொதுமக்களிடம் இன்னும் பழைய 2 ரூபாய் நோட்டுகள் இருக்கிறதா என்பதை கண்டறிய இந்த நூதன விற்பனையைத் தொடங்கினோம். இதுவரை எங்களிடம் 120 ரூபாய் மதிப்பிலான 2 ரூபாய் நோட்டுகள் வந்துள்ளன. இதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது.

எங்கள் உணவகம் சார்பில் 30 நிமிடங்களில் 30-க்கும் மேற்பட்ட உணவுகள் கொண்ட பாகுபலி உணவை உட்கொண்டால் 1 இலட்சம் ரூபா ரொக்க பரிசு வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளோம்.

இதன் விலை 1,999 ரூபா. இக்கட்டணத்தைச் செலுத்தி 30 நிமிடங்களில் 30-க்கும் மேற்பட்ட உணவுகளை உட்கொள்பவர்களுக்கு 1 இலட்சம் ரூபா ரொக்க பரிசை வழங்கி வருகிறோம். இதுவரை இந்த போட்டியில் 7 பேர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர்" என கூறியுள்ளனர்.

## பய பக்தியுடன் திருட்டு



தமிழகத்தின் வேலூர் மாவட்டம், கொசப்பேட்டை பகுதியில் ஆனைகுலத்தம்மன் என்ற கோவிலொன்று உள்ளது.

இந்த கோவிலுக்கு சுவாமியை தரிசிப்பதுபோல் சென்ற நபரொருவர், அம்மன் சிலையில் இருந்த தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளார்.

இதில் விநோதம் என்னவெனில், கோவிலுக்கு சென்றவுடன் அங்கிருந்த விபூதியை பூசிக்கொண்டு சுவாமியை தரிசித்தவர், அங்கிருந்த 2 வாழைப்பழங்களில் ஒன்றை எடுத்து உட்கொண்டுள்ளார். சட்டென எழுந்து அம்மன் கழுத்தில் இருந்த தங்க நகைகளை திருடி விட்டு மறுபடியும் அமர்ந்து நெற்றியில் விபூதி பூசிக்கொண்டுள்ளார்.

மீதம் இருந்த வாழைப்பழத்தை உட்கொண்ட பின்னர், கைகூப்பி வணங்கி, தான் அணிந்திருந்த, மாலையை அங்கிருந்த தட்டில் கழட்டி வைத்துவிட்டு, மறுபடியும் கைகூப்பி வணங்கியுள்ளார்.

எழுந்து நின்று கடைசியாக ஒரு கும்பிடு போட்டுவிட்டு, சுற்றிமுற்றிலும் யாரும் பார்க்கிறார்களா? என்று நோட்டமிட்டு, வெளியே சென்ற அவரது காட்சிகள் அனைத்தும் சி.சி.டி.யில் பதிவாகியுள்ளது.

இஸ்ரேல்

# "நிவாரண பொருட்களை திருடும் ஹமாஸ்"



இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினர் இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது. ஹமாஸ் அமைப்பினரிடம் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிப்பதற்காக இஸ்ரேல் போர் நிறுத்தம் அறிவித்தது.

இதையடுத்து, காசா மக்களுக்கு தேவையான நிவாரண பொருட்களை பல்வேறு நாடுகள், சர்வதேச அமைப்புகளும் அனுப்பி வருகின்றன.

இந்நிலையில், காசாவில் பொதுமக்களை தாக்கியதாகவும், சர்வதேச அமைப்புகள் வழங்கிய மனிதாபிமான பொருள்களை கொள்ளையடித்ததாகவும் ஹமாஸ் அமைப்பின் மீது இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

மேலும், காசாவின் தேவைகளை விட ஹமாஸ் அமைப்பினர் பயங்கரவாதத்துக்கே முன்னுரிமையை அளித்து வருவதாகக் கூறிய இஸ்ரேலிய பாதுகாப்புப் படை, தாக்குதல்கள் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் நிவாரண பொருட்களை திருடும் வீடியோக்களை எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளது.

பங்களாதேஷ்

## தீயணைப்பு வீராங்கனைகளாக 15 பெண்கள் நியமனம்

உலகளவில் ஆண்களுக்கு சமமாக பெண்களும் அனைத்துத் துறைகளிலும் தடம்பதித்து வருகின்றனர்.

இந்நிலையில், பங்களாதேஷில் 15 பெண்கள் தீயணைப்பு வீராங்கனையாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் தீயணைப்பு மற்றும் மீட்பு துறையில் பெண்கள் பணிபுரிந்துள்ளனர். ஆனால், தீயணைப்பு வீரர்களாக பெண்கள் நியமிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

இதுதொடர்பாக அந்நாட்டின் உள்துறை அமைச்சர் அசாதுஸ்மான் கான் கமல் கூறுகையில், இது பாலின பாகுபாட்டை நீக்கும் முக்கிய நடவடிக்கைகளுள் ஒன்று என தெரிவித்துள்ளார்.





இஸ்ரேல்

போர் நிறுத்த தீர்மானத்தை

## தடுத்து நிறுத்திய அமெரிக்கா

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்துவதற்கு ஐ.நா அவை சாசனத்தின் 99ஆவது பிரிவை பயன்படுத்தி ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். இந்தக் கூட்டத்தில் போர் நிறுத்தம் தொடர்பாக தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பிடம் 100-க்கும் மேற்பட்ட பிணைக்கைதிகள் இருக்கும் நிலையில், இந்த தீர்மானம் ஹமாஸின் கைகளில் அதிகாரத்தை அளிக்கும் என தெரிவித்து இந்த தீர்மானத்திற்கு அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரம் மூலம் மறுப்பு தெரிவித்து நிராகரித்தது. இதனால் போர் நிறுத்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது.





இங்கிலாந்துக்கெதிரான தொடரை

# மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை மே. தீவுகளும், இரண்டாவது போட்டியை இங்கிலாந்தும் வென்ற நிலையில், பார்படோஸில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியை மே. தீவுகள் வென்றதைத் தொடர்ந்தே 2-1 என தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மே. தீவுகளின் அணித்தலைவர் ஷே ஹோப், இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார். மே.தீவுகள் சார்பாக சகலதுறைவீரர் மத்தியூ போர்டே இப்போட்டியில் அறிமுகத்தை மேற்கொண்டார்.

மழை காரணமாக 43 ஓவர்கள் கொண்ட போட்டியாக ஆரம்பித்து பின்னர் மீண்டும் மழை பெய்தமை காரணமாக இங்கிலாந்தின் இனிங்ஸானது 40 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றதுடன் முடிவுக்கு வந்தது. துடுப்பாட்டத்தில் பென் டக்கெட் 71 (73), லியம் லிவிங்ஸ்டோன் 45 (56) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சு போர்டே 3, றொமாறியோ ஷெப்பர்ட் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

டக்வேர்த் லூயிஸ் ஸ்டேர்ன் முறைப்படி 34 ஓவர்களில் 188 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மே. தீவுகள், கேசி கார்ட்டியின் 50 (58), அலிக் அதனஸேயின் 45 (51), றொமாறியோ ஷெப்பர்ட்டின் ஆட்டமிழக்காத 41 (28) ஓட்டங்களோடு 31.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் வில் ஜக்ஸ் 3, றெஹான் அஹ்மட் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக போர்டேயும், தொடரின் நாயகனாக ஷே ஹோப்பும் தெரிவாகினர்.

## சதுரங்கத்தில் சாஹிரா சாதனை

எம்.எஸ்.எம். ஸாகிர்

இலங்கை பாடசாலை சதுரங்க சம்மேளத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் மாணவர் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தையும், 17 வயதுக்குட்பட்ட பிரிவில் இரண்டாமிடத்தையும் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், அதிக போட்டிகளில் வெற்றி பெற்று 17 வயதுப் பிரிவில், ஐ.எம்.சம்லி சாஹி, எம்.இஸட். எம்.சானிப், ஏ.எஸ்.எம்.மிஜ்வாத் மற்றும் 15 வயதுப் பிரிவில் ஐ.கே.எம்.ஆக்கில் கான், எம்.ஜே.ஐ.சஹ்மி, ஏ.ஏ.பர்வீஸ் ஆகியோர் போர்ட் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர்.









யாழ். மாவட்ட 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கால்பந்தாட்டம்:

## தெல்லிப்பளை மகாஜனா சம்பியன்

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் 12 வயதுப் பெண்கள் அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி சம்பியனானது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அக்கல்லூரியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றே மகாஜனாக் கல்லூரி சம்பியனானது.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## ஏ.சி மிலனை வென்ற அத்லாண்டா

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், அத்லாண்டாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் தோற்றது.

மிலன் சார்பாக, ஒலிவியர் ஜிரூட், லூகா ஜோவிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அத்லாண்டா சார்பாக அடெமோலா லுக்மன் இரண்டு கோல்களையும், லூயிஸ் முரியெல் ஒரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, ஹெலாஸ் வெரோனாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் லேஸியோ சமப்படுத்தியது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## போர்ண்மெத்திடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற போர்ண்மெத்துடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது. இந்நிலையில், அஸ்டன் வில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 11 டிசெம்பர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.